## 6. தலைப்பு 4 – உயர் நீதிமன்ற நீதிபதிகள்

### 6.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| சில்லறைக் காசேடு | நிதிப்பிரமாணம் 446 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொறுப்புகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| எரிபொருள், உராய்வு நீக்கிகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| வாகன நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| கடமைத் பதிவேடு | தொலைபேசிப் | நிதிப்பிரமாணம் 845(1) | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |

**6.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பத்துச் செலவின விடயங்களுக்கு ரூபா 177,755,701 மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 30 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு முரணாக 2010 ஆம் ஆண்டின்போது உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 250,000 எல்லையை விஞ்சி இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது.

**6.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**6.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.4.3 உள்ளகக் கணக்காய்வு**

-----------------------------------------

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

----------------------------------------------------------------------

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**6.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 3 மாத தாமதத்தின் பின்னர் 2015 யூன் 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**6.6 செயலாற்றல்**

---------------------

2014 ஆம் ஆண்டின் நீதி அமைச்சினது செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் திணைக்களத்தின் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

**(அ)** உயர் நீதிமன்றங்களின் செயலாற்றல்

----------------------------------------------------------

உயர் நீதிமன்றங்களில் தீர்ப்பதற்கிருந்த வழக்குகள் தொடர்பான செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வழக்கு வகை | 2014 சனவரி 01 இல் உள்ளவாறு தீர்ப்பதற்கிருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 2014 இல் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2014 ஆம் ஆண்டின் போது தீர்ப்பதற்கிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 2014 ஆம் ஆண்டின் போது கோரிக்கைகளுக்கு இடமளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2014 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பதற்கிருந்த எஞ்சிய வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை உரிமை கோரிக்கைப் பத்திரம் | 817 | 369 | 1186 | - | 448 | 738 |
| விசேட அனுமதி கோரிக்கைப் பத்திரம் | 379 | 261 | 640 | 74 | 230 | 336 |
| பாராளுமன்றத்தின் அதிகாரச்சட்ட வரைவு தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் கட்டளை | - | 05 | 05 | - | 05 | - |
| மேன்முறையீட்டு வழக்குகள் | 368 | 199 | 567 | - | 211 | 356 |
| வணிக நீதிமன்ற மேன்முறையீட்டு வழக்குகள் | 257 | 88 | 345 | - | 121 | 224 |
| உயர் நீதிமன்ற அனுமதி கோரிக்கைப் பத்திரம் | 153 | 80 | 233 | 13 | 74 | 146 |
| ரீட் கோரிக்கைப் பத்திரம் | 01 | 02 | 03 | - | 01 | 02 |
| மாகாண நீதிமன்ற மேன்முறையீட்டு வழக்குகள் | 1103 | 686 | 1789 | 155 | 458 | 1176 |
| மீள்திருத்த வழக்குகள் | - | 07 | 07 | - | 02 | 05 |
| அரசியலமைப்பு கருத்தை வெளிப்படுத்துதல் தொடர்பான வழக்குகள் | 01 | - | 01 | - | - | 01 |
| நானாவித வழக்குகள் | 06 | 04 | 10 | - | 01 | 09 |
| SC TAB APPEAL | 01 | 01 | 02 | - | 02 | - |
| SC SPECiAL | 07 | 08 | 15 | - | 02 | 13 |
| மொத்தம் | 3,093 | 1,710 | 4,803 | 242 | 1,555 | 3,006 |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பதற்கிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 3,006 ஆகும்.

**(ஆ)** மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் செயலாற்றல்

மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தீர்ப்பதற்கிருந்த வழக்குகள் தொடர்பான செயலாற்றல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வழக்கு வகை | 2014 சனவரி 01 இல் உள்ளவாறு தீர்ப்பதற்கிருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 2014 இல் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2014 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பதற்கிருந்த எஞ்சிய வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ரீட் கோரிக்கைப் பத்திரம் | 1,135 | 416 | 348 | 1,203 |
| நீதிமன்ற மேன் முறையீடு | 817 | 283 | 243 | 857 |
| மாகாண நீதிமன்ற மேன் முறையீடு | 1,224 | 200 | 307 | 1,117 |
| சிவில் மேன் முறையீடு | 1,379 | - | 398 | 981 |
| மாகாண நீதிமன்ற மீள்திருத்த கோரிக்கைப் பத்திரம் | 285 | 156 | 159 | 282 |
| மீள்திருத்தம் (சிவில்) மற்றும் மேன் முறையீட்டு கோரிக்கைப் பத்திரம் | 113 | 20 | 49 | 84 |
| ஏனைய கோரிக்கைப் பத்திரம் | 82 | 90 | 33 | 139 |
| மொத்தம் | 5,035 | 1,165 | 1,537 | 4,663 |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தீர்ப்பதற்கிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 4,663 ஆகும்.